# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2331/03 - 2023 මැයි මස 08 වැනි සඳුදා - 2023.05.08

*2331/03 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு மே மாதம் 08 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

### வடமேல் மாகாணத்தின் மாகாண சபை

வடமேல் மாகாண ஆளுநரது அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புச் சட்டத்தின் 154 இ பிரிவினாலும் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இடைநேர்விளைவான) சட்டத்தின் 2(1)(அ) பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 252 ஆம் அதிகாரமாகிய மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 277(1) (அ) பிரிவினாலும் வடமேல் மாகாணத்தின் ஆளுநரான அட்மிரால் ஒஃப் த ஃபிலீட் வசந்த கரன்னாகொட ஆகிய எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, துசார சங்ஜீவ விதாரண என்பவர் குருநாகல் மாநகர சபையின் நகர முதல்வராக நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற போது, 252 ஆம் அதிகாரமாகிய மாநகர சபை கட்டளைச் சட்டத்தில் 277(1) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்கள் ஏதும் இழைக்கப்பட்டுள்ளதா என்பதை ஆராய்ந்து அறிவிக்குமாறு 2022.11.09 ஆந் திகதிய 2305/12 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட உத்தரவின் பிரகாரம் நியமிக்கப்பட்ட தனி நபர் விசாரணை ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், மேற்படி துசார சங்ஜீவ விதாரண என்பவருக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள 18 குற்றச்சாட்டுக்களில், 11 குற்றச்சாட்டுகளுக்கு குற்றவாளியாக தீர்மானிக்கப்பட்டுள்ளதாக எனக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், விசாரணை ஆணைக்குழுவினால் தனது விசாரணையை நடாத்திக் கொண்டிருக்கும் வேளையில் குறித்த மாநகர சபையின் கட்டளைச் சட்டத்தின் 215அ பிரிவில் மற்றும் 2020.10.29 ஆந் திகதியிட்ட 2199/15 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள 2020 ஆம் ஆண்டுக்கான மாநகர சபை வரவு செலவுத் திட்டத்தை தயாரித்து நடைமுறைப்படுத்தும் உத்தரவுகளின் விதிகளை அமுல்படுத்தியதன் காரணமாக குறித்த துசார சங்ஜீவ விதாரண என்பவர் 2022.12.31 ஆந் திகதி தொடக்கம் குருநாகல் மாநகர சபையின் நகர முதல்வர் பதவியிலிருந்து இராஜினாமா செய்துள்ளதாகக் கருதப்படுகின்றது.


1A - PG 6316 — 07 (2023/05)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

மேலும், மேற்படி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் மற்றும் முடிவுகள் தொடர்பான அனைத்து ஆவணங்களையும் நான் சரியாக ஆராய்ந்து ஆய்வு செய்ததன் பின்னர், மேற்படி துசார சஞ்ஜீவ விதாரண என்பவர் குருநாகல் மாநகர சபையின் நகர முதல்வராக நடவடிக்கை மேற்கொண்ட போது 252 ஆம் அதிகாரமாகிய மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 277(1) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்கள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட குற்றங்கள் செய்யப்பட்டுள்ளன என்பதைத் தீர்மானிப்பதற்குப் போதுமான விடயங்கள் உள்ளன என்பதில் நான் திருப்தி அடைகிறேன்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விடயங்களையும் கவனத்தில் கொண்டு, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புச் சட்டத்தின் 154 இ சட்டத்தினாலும் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இடைநேர்விளைவான) சட்டத்தின் 2(1)(அ) ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 252 ஆம் அதிகாரமாகிய மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 277(1) ஆம் பிரிவினால் வடமேல் மாகாணத்தின் ஆளுநரான அட்மிரால் ஒஃப் த ஃபிலீட் வசந்த கரன்னாகொட ஆகிய எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி, மேற்படி துசார சங்ஜீவ விதாரண என்பவர் 2022.12.31 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வருமாறு குருநாகல் மாநகர சபையில் நகர முதல்வர் மற்றும் உறுப்பினர் பதவியில் இருந்து நீக்கப்பட்ட நபராகக் கருதப்படுவார் என இதன் மூலம் உத்தரவிடுகிறேன்.

அட்மிரால் ஒஃப் த ஃபிலீட் வசந்த கரன்னாகொட,
வடமேல் மாகாணத்தின் ஆளுநர்.

குருநாகல்,
2023, மே 04.

EOG 05-0007

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.